சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
Special Issue Editor

முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

Published by
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-1
Part -1

Scanned by TapScanner

முனைவர் ம. கவிதா எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உதவிப்பேராசிரியர்
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எலையாம்பாளையம், நாமக்கல்

## முகவுரை

உலகின் முதல் மொழியாகிய எம்மொழித் தமிழ் உலகிற்குப் பல மொழிகளைக் கொடுத்தது. எம்முடைய மொழிக்கு எம்மொழியிலிருந்தும் எக்காலத்தும் எதுவும் தேவையிருந்ததில்லை. புதிய பொருட்களை உலகம் பெற்றெடுக்கும் போதெல்லாம் தனக்குத் தேவையான சொற்களைத் தானே உருவாக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'நவீனத் தமிழாய்விதழ்'** பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

Scanned by TapScanner

சிறப்பிதழ்
**Special Issue**

**3-4 பங்குனி 2052**
**16th - 17th March 2021**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 1. | சி.தீபா & ரா.ரவிச்சந்திரன் | 'பூனாத்தி' சிறுகதை தொகுப்பில் எதார்த்த நிலை கதை மாந்தர்கள் | 1-5 |
| 2. | S. CHELLAPPA | மனிதனை ஆளும் ஐம்புலன்கள் | 6-10 |
| 3. | ம.கவிதா | சூர்யகாந்தன் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள் | 11-16 |
| 4. | க. இராஜேஷ் | ஆலயங்களில் தாள இசைச் சிற்பங்கள் | 17-20 |
| 5. | S. உமா | அறம்- ஓர் ஆய்வு | 21-25 |
| 6. | பெ.சுமதி | பரிபாடலில் மதுரை மக்களின் வாழ்வியல் | 26-34 |
| 7. | இ.கலைக்கோவன் | முருகவேள் படைப்புகளின் வழி மார்க்சிய பார்வையில் மனிதகுல வாழ்வியலும் சூழலியலும் | 35-40 |
| 8. | இரா. ஜெய்சங்கர் | ஆசாரக்கோவையில் சுகாதாரச் சிந்தனைகள் | 41-46 |
| 9. | ர.ரதி | இலக்கண உரைகளில் வாழ்வியல் விழுமியங்கள் | 47-51 |
| 10. | ப.குருசந்தர் | திரைத்துறையில் இலக்கியவாதிகள் | 52-56 |
| 11. | தா.க. அனுராதா | பாரதியார் கவிதைகளில் தேசிய ஒருமைப்பாடு | 57-60 |
| 12. | கு. பத்ம பிரியா | சங்க இலக்கியங்களில் வாழ்வியல் | 61-66 |
| 13. | ரா. ராஜேஸ்வரி | புதுக்கவிதையில் வாழ்வியல் | 67-70 |
| 14. | கா. சந்திரசேகரன் | பட்டினப்பாலை வெளிப்படுத்தும் மக்கள் விளையாட்டு | 71-74 |
| 15. | அ. லதா | சிறுதெய்வ வழிபாட்டில் கெசக்கோம்பைக் கன்னி | 75-79 |
| 16. | SUNITHA MADHAVAN | THE EPIGRAPHIST OF EPIC PROPORTIONS | 80-88 |
| 17. | ஆ.ஏழுமலை | வெ. இறையன்புவின் நற்சிந்தனை | 89-93 |
| 18. | ஏஞ்சலின் பெராக்கா கிறிஸ்டோபல் & அலிஸ் ராணி | இரட்சணிய யாத்திரிகத்தில் வாழ்வியல் | 94-98 |
| 19. | இரா. ரம்யாமகேஸ்வரி & ந.பாமிதா | நற்றிணை கூறும் களவு வாழ்க்கை முறை | 99-103 |
| 20. | அ. ஜவி & ஜெ. சுஜாதா | விவேகசிந்தாமணி காட்டும் வாழ்வியல் கூறுகள் | 104-110 |
| 21. | வி.ஜெயபிரியா & க. தமிழ்ச்செல்வன் | உரையாடல் கலையில் படர்க்கை மாந்தரின் கூற்று | 111-118 |
| 22. | சு. ஜெயந்தி & G.R. வள்ளியம்மாள் | வேதாத்திரி மகரிஷியின் மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்தான "அறிவே தெய்வம்" என்ற தத்துவத்தை பற்றிய ஓர் ஆய்வு | 119-124 |
| 23. | ஜா.காதர்மைதின் | குறுந்தொகையில் முல்லை நில மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் | 125-130 |
| 24. | அ.கோதேஸ்வரி & தா.ஷமிலா ஜோஸ்டர் | ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளில் கணவன் மனைவி உறவுமுறைச் சிக்கல் | 131-135 |
| 25. | சி.லோகநாயகி & க. தமிழ்ச்செல்வன் | குறுந்தொகையில் எண்வகை மெய்ப்பாடுகள் | 136-143 |
| 26. | ப. மாக்கில்மா | அகநானூற்றில் பரணர் பாடல்களின் வழி மன்னர்களின் போர்த்திறம் | 144-147 |
| 27. | தே.மரிய மெர்லின் கவிதா & மி. கவிதா | கலித்தொகை காட்டும் ஆயர் வரைவுமுறை | 148-150 |
| 28. | மு. மெய்வேல் & பி. குருசந்தர் | எட்டுத்தொகை - அகஇலக்கியங்களில் முல்லைத் திணை தலைவி | 151-154 |
| 29. | மு. முனீஸ்மூர்த்தி | தமிழ் மரபில் 'சேரி' | 155-162 |
| 30. | த. முத்துலெட்சுமி & சு.மல்லிகா | ஐங்குறுநூற்றில் வேளாண்மை சிந்தனைகள் | 163-167 |
| 31. | ச. பாண்டுரங்கன் | நா.முத்துக்குமார் படைப்புகளில் சமுதாயம் | 168-173 |
| 32. | ர.பரமேஸ்வரி | கிராமத்து நதி கவிதைகளின் வழி தமிழர் வாழ்வியல் | 174-179 |
| 33. | அ. இராஜலட்சுமி | நடுகல் வழிபாடு | 180-185 |
| 34. | கா.ரஜினி | யோகக் கலையும் சித்தர்களும் | 186-189 |
| 35. | பி.ராணி | தொல்காப்பிய அறுவகை இலக்கணங்களில் அளவு நிறைப் பெயர்கள் | 190-194 |
| 36. | கோ.இரவிச்சந்திரன் | புதுக்கவிதையில் பெண்ணியம் | 195-201 |
| 37. | ஆ. சசிகலா | உமையம்மை பற்றிய பிள்ளைத்தமிழில் வரும் பக்தியுணர்வு | 202-207 |
| 38. | ரா.சத்யா | காரிக்கைக்கு பின் உறுப்பிலக்கண வளர்ச்சி நிலைகள் | 208-213 |
| 39. | இரா.சாவித்திரி | பாலகுமாரன் புதினங்களில் பெண்ணியச் சிந்தனை | 214-218 |
| 40. | ம.சிவகாமி | திருமந்திரமும் இன்றைய வாழ்வியலும் | 219-223 |
| 41. | ஜ.ச.சுபாஷிணி & வெ. இராமதாஸ் | வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் குழந்தைகளுக்கான அறநெறிகள் | 224-229 |
| 42. | S. சுகன்யாதேவி | சிவவாக்கியரின் சமத்துவச் சிந்தனைகள் | 230-233 |
| 43. | ந.சுமதி | சு. தமிழ்செல்வியின் நாவலில் 'பொன்னாச்சரம்' | 234-238 |
| 44. | ப.கு.சுதா | சித்தர்கள் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 239-242 |
| 45. | ஆ. தியாகராஜன் | தமிழ் இலக்கியங்கள் சுட்டும் மருத்துவம் | 243-247 |
| 46. | அ.வடிவுக்கரசி | தமிழ்ப் சிற்றிதழ்களில் காணும் கட்டுரையின்வழி வாழ்வியல் | 248-253 |
| 47. | செ.வீரலட்சுமி | குறுந்தொகை நெய்தல் திணை தலைவியின் வாழ்வியல் | 254-257 |
| 48. | ஹ.சுபி & ரா.விஜி | அறிவியல் இதழ்களில் தமிழ்மொழிநடையும் கலைச்சொல்லாக்கமும் | 258-261 |
| 49. | சு.விமலா | தமிழ்ப் பருவ இதழ்களில் சிறுகதைகளின்வழி வாழ்வியல் | 262-266 |
| 50. | சை.மைதீன்பீ | சிறுகதைகள் உணர்த்தும் மொழிநடை | 267-272 |




Scanned by TapScanner

# ‘பூனாத்தி’ சிறுகதை தொகுப்பில் எதார்த்த நிலை கதை மாந்தர்கள்

**சி. தீபா**
ஆய்வியல் நிறைஞர்(ப.நே), தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் ரா.ரவிச்சந்திரன்**
ஆய்வு நெறியாளர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா.

இக்கால இலக்கிய வகைகளுள் சிறுகதை குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ளது. மற்ற இலக்கிய வகைகளைக் காட்டிலும் 21-ஆம் நூற்றாண்டிலும் சிறந்த வளர்ச்சியை நோக்கி வீறுநடை போட்டு வருகிறது. சிறுகதைகள் தொடங்கும்போது விறுவிறுப்பான உரையாடலாகவே, நாடகக் காட்சியைக் காண்பது போன்ற சுவையை உள்ளடக்கியோ அமைய வேண்டும் என்னும் விழிப்புணர்வு இன்று உருவாகி உயர்ந்து பெருமை பெற்று வருகிறது இதனாலேயே, படைப்பாளனையும் படிப்பவனையும் தன் வசம் வைத்துள்ளது எனலாம். அவ்வகையில் வெ.இறையன்புவின் ‘பூனாத்தி’ சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகள் இங்கு ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இறையன்புவின் பூனாத்தி சிறுகதைத் தொகுப்பில் பெரும்பாலான கதைகளில் எதர்த்த நிலை இடம்பெறுவதால் கற்பனைக் கதைமாந்தர்கள் குறைவாகவும் எதார்த்த நிலை கதைமாந்தர்கள் அதிகமாகவும் படைக்கப்பட்டுள்ளனர். பூனாத்தி சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகள் பெரும்பாலும் நடைமுறைச் சிக்கல்களையும் எதார்த்த நிலையையும் எடுத்துரைக்கின்றது. பல இடங்களில் மிக உன்னத செயல்களை கொண்டு விளங்கும் நேர்மறை கதாப்பாத்திரங்களை எடுத்துரைக்கின்றது. இக்கட்டுரையில் பூனாத்தி சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியப்பணியின் எதார்த்த நிலையும், முதுமை வாழ்வில் இல்லறத்தின் சிறப்பினையும், இலக்கியத்தரம் வாய்ந்த இன்றைய இதழ்களின் எதார்த்த நிலை குறித்தும் நேர்மறைக் கதாப்பாத்திரங்களின் வழி ஆராய்ந்து எடுத்துரைக்கப்படுகின்றது.

## சிறுகதை அறிமுகம்

“வாழ்க்கையின் ஒரு குறுக்குவெட்டை, கலைத்திறனும் சொல்நயமும் கொண்டதாகச் சித்தரித்தால் அதுவே சிறுகதையாகிறது.”[1] என்று கு.ராஜம் கிருட்டிணன் கூறுகிறார். ஒரு சிறுகதை படைப்பாளியின் உணர்ச்சி வெளியீட்டாகத் திகழும் போது அதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் கதை ஆசிரியரின் அனுபவத்தை அதே உணர்வுகளை நகலாக அனுபவிக்க சாத்தியமாகிறது. இது உள்ளத்தின் உள்ளே படிந்து அமைதியும் இனிமையும் கூடிய உண்மைகளை முழுமையாகச் சிந்திக்க அந்தச் சிறுகதை பெருமையும் நிறைமையும் உடையதாகும் என்பதில் ஐயமில்லை. சிறுகதை என்பது யாரும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். அதில் குழப்பங்களும் சிக்கல்களும் இருக்க முடியாது. அதன் இலக்கு நோக்கிச் செல்வதொன்றே சிறுகதையின் இலக்கணம். “சுருங்கச் சொல்லி சுருக் என உணர்த்தும் மாட்சி சிறுகதைக்கே உரிய ஆட்சி”[2] என்று கோமகள் கூறுகிறார். சிறுகதையானது

வாசகர்களின் உள்ளுணர்வைத் தட்டியெழுப்பும் வண்ணமாக அமைத்தல் வேண்டும். "எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது தன்னகத்தே கொண்டிருக்கின்றதோ அதை படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப் போல் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும்"[3] என அகிலன் சிறுகதையின் இலக்கணமாகக் கூறுகின்றார்.

### வெ.இறையன்பு

சேலம், காட்டூர் என்ற ஊரில் பிறந்த வெ.இறையன்பு இந்திய ஆட்சிப்பணியில் இருந்தவர். இவர் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் சிறந்து விளங்கினார். இவர் சிறுகதை, கவிதை கட்டுரை என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவரின் 'வாய்க்கால் மீன்' என்ற நூலிற்கான தமிழக அரசின் சிறந்த கவிதைத் தொகுப்பிற்கான விருது 1996 ஆம் ஆண்டு பெற்றார். 'இலக்கியத்தில் மேலாண்மை' என்ற புத்தகத்திற்கு தினத்தந்தி நாளிதழ் இரண்டு இலட்சம் ரூபாயுடன் 2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல் என்ற இலக்கியப் பரிசை அளித்தது. இந்த விருது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது. இவரது பூனாத்தி என்ற பெயரில் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுப்பு மொத்தம் 14 சிறுகதைகளைக் கொண்டுள்ளது. பூனையை பாசமாக வளர்த்த ஒரு தம்பதிகளின் கதையைச் சொல்வது பூனாத்தி சிறுகதையாகும். இதன் பெயரையே சிறுகதைத் தொகுப்பிற்கும் வைத்துள்ளார்.

### எதர்த்த நிலை வாழ்வும் கதைமாந்தர்களும்

இன்றைய சிறுகதை இலக்கியம், சமுதாயத்தில் நிலவும் சிக்கலை எடுத்துக்காட்டி அதற்குத் தீர்வு தரும் வகையில் படைக்கப்படுவதற்குப் பாத்திரப்படைப்பும் உறுதுணையாக அமைகிறது. "கதைப்பின்னல் கதை மாந்தர் வழி நடக்க வேண்டியுள்ளது. கதையாசிரியரின் பார்வை விளக்கமும் கதை மாந்தர் செயல்களின் மூலமே விளக்கம் பெறவல்லன. ஆகவே சமுதாயச் சிக்கலைக் கதையில் புலப்படுத்துவதற்குக் கதைமாந்தர் படைப்பே ஒரு நேரிய வழியாகின்றது"[4] எனும் கூற்றை கனகசுந்தரம் அடிமொழிகிறார். "கதை மாந்தர்களைப் படைத்துக் காட்டுவதென்பது அரிய கலை ஆகும். பாத்திர வார்ப்பில் கலைஞனின் தனித்திறம் புலனாகும். கதை மாந்தரின்றி கதை எழுத இயலாதது போல் ஆசிரியரின் சாயலின்றிக் கதை மாந்தர்களைக் காணுதலும் அரிதே"[5] என்று முருகேசன் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார். இன்றைய சமுதாயத்தில் உள்ள நடைமுறைப் பிரச்சனைகளையும் சிக்கல்களையம் எடுத்துரைக்கும் பாத்திரப்படைப்புகள் எதார்த்த நிலை கதைமாந்தர் எனப்படும். இப்பாத்திரப்படைப்புகள் இக்கதை கதையின் வளர்ச்சிக்கும் வாசகர்களின் பிடிப்புத்தன்மையுடன் பின்தொடர்வதற்கும் ஏதுவாக அமைகிறது. மேலும் சம காலத்தில் நடக்கும் குடும்பம் அல்லது சமுதாயச் சிக்கல்களை எதிர்கொண்டு அதனைக் களையும் முறைகளைக் கதாப்பாத்திரங்களை மூலம் அறியும் வாய்ப்பினை, வாசகர்கள் பெறுவதால் எதார்த்த நிலை கதாப்பாதிரங்களை எப்பொழுதும் வாசகர்கள் விரும்பிப் படிப்பர். பூனாத்தி சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் உணர்வெழுச்சியூட்டும் நிலை கதாப்பாத்திரங்கள் கதையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் முக்கியத்துவம் பெறுகிறது. இனி பூனாத்தி சிறுகதைத் தொகுப்பில் வரும் உணர்வெழுச்சியூட்டும் நிலைக் கதாப்பாத்திரங்கள் குறித்து ஆராய்ந்து எடுத்துரைக்கப்படுகிறது.

### ஆசிரியர்ப்பணியே அறப்பணி

சேவியர் வாத்தியார் என்ற கதாப்பாத்திரத்தின் பெயரையே கதையின் தலைப்பாகக் கொண்டு விளங்குகிறது. சம காலத்தில் இருக்கும் சராசரி ஆசிரியர்களை விட சற்று கூடுதல் பொறுப்புணர்ச்சி கொண்ட பேராசிரியராக இக்கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. புத்தகத்தை வகுப்பறையில் எடுக்காமல் பாடம் நடத்தும் பாங்கும்



Scanned by TapScanner

கரும்பலகையில் எழுதிய எழுத்துக்கள் அழியும்போது அழிகிறதே என்ற ஏக்கமும் படிப்பை முடித்தும் ஆசிரியரை முன் மாதிரியாக எடுத்து நினைவு கூர்வது போன்ற சம்பவங்கள் டோனி என்ற மாணவன் மூலம் இச்சிறுகதையில் இடம் பெறுவது சேவியர் வாத்தியார் ஒரு சிறந்த பேராசிரியர் என்பதை இக்கதை உணர்த்துகின்றது. ஒருவர் தொழிலில் அல்லது வேலையில் சிறந்து விளங்கினாலும் அவரது இல்லற வாழ்க்கையில் சிறப்பு இருக்காது. அது சேவியர் வாத்தியார் வாழ்விலும் பிரதிபலிக்கின்றது. அவரது மனைவி அவரது வேலையை ஒரு பணம் சம்பாதிக்கும் சாதாரண வேலையாகவே நினைத்து அவரிடம் பேசுகின்றார். அவரது மகன் விபத்தில் இறப்பு, மகளது திருமண ஏற்பாட்டில் தொடர் தடங்கல் போன்ற சம்பவங்கள் படிப்போரது சிந்தனையில் துன்ப உணர்ச்சிப் பெருக்கில் திளைக்க வைக்கிறது.

"சேவியர் வாழ்க்கை, தனிப்பட்ட முறையில் பல துன்பங்கள் நிறைந்தது. அவருடைய ஒரே மகன் விபத்தில் இறந்து போனான். மகளுக்கோ திருமணமாவதில் பலவித முட்டுக்கட்டைகள். அவரால் அதிகப் பணம், வசதிகள் தருவதற்கு இயலாது. பெண்ணை நன்றாகப் படிக்க வைத்திருந்தார். சுயமாக நிற்கும் தன்னம்பிக்கையை ஊட்டியிருந்தார்."[6]

இவ்வாறு சேவியர் தனது கடமைகளை சரியாகச் செய்திருந்தாலும் அவரது வாழ்க்கையில் இன்பங்களை எளிதாக அவர் அனுபவிக்கவில்லை என்பதை உணரமுடிகிறது. இவ்வாறு ஒரு சிறந்த சாதனை ஆசியரின் இன்றைய இல்லற வாழ்வின் எதார்த்த நிலையை உணர்த்துகின்றார்.

### முதுமையில் இல்லற வாழ்வின் நிலை

'தாம்பத்தியம்' என்ற சிறுகதையில் சித்ரஸ்ரீ என்ற பெண்ணின் கணவனாக அன்புராஜ் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. அன்புராஜ் தனது மனைவி சித்ரஸ்ரீ மீது முதல் பதினைந்து வருடங்கள் துளியும் பாசம் இல்லாமல் வாழ்ந்து நிலையை உணரமுடிகிறது. அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் ஒரு ஜடப்பொருளாகவே வந்து செல்கிறார். இதனை ஆசிரியர்

"நமக்குக் கல்யாணமாகி இன்னிக்கு பதினைஞ்சி வருடம் முடியப்போகுது என்று எவ்வளவு ஆர்வமாக அவள் சொன்னாள். அதற்கு முகமலர்ச்சியை வியப்பை அல்லது குறைந்தபட்சம் ஒரு ஒப்பு தலையாவது அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவனிடமிருந்து எப்படிப்பட்ட பதில் கிடைத்தது.

'சரி! அதுக்கென்னா இப்போ?

என்று கேட்பது போன்ற ஒரு அலட்சியப் பார்வை. அவனிடமிருந்து அன்பையும் அனுசரனையையும் எதிர்பார்த்தது அவளுடைய தப்புத்தான். பதினைந்து வருடங்களில் நிகழாதது இப்போது மட்டும் புதிதாக நடந்துவிடப் போகிறதா என்ன?"[7] என்றவாறு எடுத்துரைக்கிறார். இன்றைய சமுதயாத்தில் ஆண்கள் பலரும் தங்களது மனைவியின் உணர்வுகளை புரிந்து கொள்ளாது வாழுகின்றனர் என்ற நிலைக்கு அன்புராஜ் கதாப்பாத்திரம் ஒரு உதாரணமாகத் திகழுகின்றது. இவ்வாறு இல்லற வாழ்வில் முதல் பாதி வாழ்வில் இருந்தாலும், பிற்காலத்தில் அதாவது மகன் அல்லது மகள் திருமணத்திற்கு பின் கடைசி கால வாழ்வில் கணவனுக்கு துணை மனைவியும் மனைவிக்குத் துணை கணவன் தான் என்பதை இச்சிறுகதையில் ஆசிரியர் உணர்த்துகின்றார்.

சித்ரஸ்ரீக்கு முடக்குவாதம் வந்த பின் மகன் அர்விந்தும் அமெரிக்கா சென்ற பின் தனியாக இருக்கும் தனது மனைவியை ஒரு குழந்தையை பார்த்துக்கொள்வதைப் போன்று கவனித்துக் கொள்ளும் பாங்கினை ஆசிரியர் வெளிப்படுத்துவதை வாசகர்கள் எதிர்பார்த்திருக்க முடியாது.

"எப்படியெல்லாம் இந்த மனிதர் தனக்காகவே வாழ்கிறார்.. இதற்குத்தான் தாம்பத்தியமா? இத்தனை அன்பையும் இப்போது காட்டத்தான்

Scanned by TapScanner

இத்தனை நாள் காட்டாமல் இருந்தாரா? மகன் அர்விந்துக்குக் காட்டிய அன்பில் பத்தில் ஒரு பங்கு அன்பையாவது இவரிடம் நான் செலுத்தியிருப்பேனா! இவருக்கு எப்படிப் பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்? எனக்காகவே வாழும் இவருக்கு உலகமாய் நான் ஆனதற்கு யாருக்கு நன்றி சொல்வது! ஒரு நாளும் எனக்கு முடக்கவாதம் என்பதே தெரியாத வண்ணம் என்னை அன்புடன் கவனிக்கும் இவரைவிட உயாந்த மனிதர் இருக்க முடியுமா?"[8]

இவ்வாறு இன்றைய இல்லற வாழ்வில் கணவர்களின் வாழ்வின் பிற்கால நடத்தை முறைகளைின் எதார்த்தத்தை இச்சிறுகதையில் ஆசிரியர் மிக நுட்பமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் எடுத்தியம்பியுள்ளார்.

## இலக்கிய இதழ்களின் இன்றைய நிலை

'தூரிகை' என்ற சிறுகதையில் இன்றைய இதழ்களின் போக்கை அப்பட்டமாக ஞானசம்பந்தன் என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் விமர்சனம் செய்கின்றார். கீழ்த்தரமான, கவர்ச்சிகரமான செய்திகள், வாசகர்களுக்கு பயனில்லாத செய்திகள் என வெளியிடும் இன்றைய இதழுலகத்தில் அபூர்வமாக பேரிலக்கியம் குறித்து சிந்திக்கும் தன்மையுடைய செய்திகளை அடையாளம் காட்டும் நோக்கில் இச்சிறுகதை அமைகிறது.

உயிரைத் தேய்த்துகொண்டு உழைத்த ஞானசம்பந்தன் 'குவளை' இதழில் சேர்ந்து உழைத்தார். இவரின் தரமான இலக்கியப் படைப்புக்களை குவளை வியாபார இதழ் திருத்தம் செய்து அவரை திருத்தும் முயற்சி செய்தது. இதனால் அவ்விதழிலிருந்து வெளிவந்து தனது பூர்விக சொத்தை விற்று 'தூரிகை' இதழை நடத்தினார். இலக்கிய உலகில் தூரிகைக்கு நற்பெயர்தான். ஆனாலும் வருமானம் என்ற வகையில் அது பின்தங்கியது. அதன் விளைவு நட்டம் ஆனது. மனம் நொந்து தனது சொத்துக்கள் அனைத்தையும் இழந்தார். இருப்பினும் அவ்விதழை பணத்திற்காக வருமானம் நோக்கம் கொண்ட ஒருவருக்கு விற்க தயாராக இல்லை என அவ்விதழை மூடும் அவரது செயல் இன்றை சிறந்த எழுத்தாளர்களையும் பத்திரிகைகளையும் மக்கள் இனம் காணாமல் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

"கம்பீரமாக தூரிகை செத்துப் போறது. அது கைகட்டிக் குனிஞ்சி வாழறதைக் காட்டிலும் தேவலாம்ன எனக்குப் படுது. திரும்ப வரும்போது இராசேந்திரன் யோசித்தார். "தூரிகை நின்றுபோனது நம் எல்லோருக்குமான அவமானம் தான். அது தனிப்பட்ட தோல்வியல்ல."[9] என்ற வரிகள் தூரிகை போன்ற இதழ்கள் நின்றுபோறது மக்களுக்குத்தான் இழப்பு என்பதை வெளிப்படுத்துகிறார். இச்சிறுகதையின் மூலம் சிறந்த இலக்கியத்தையும் சிந்திக்கும் தன்மையுடைய செய்திகளையம் இதழ்கள் மக்களுக்கு காட்டுவதில்லை என்பதையும் அவ்வாறு காட்டும் இதழ்கள் சிலவற்றையும் மக்கள் அடையாளப்படுத்துவதில்லை என்பதையும் இன்றைய எதார்த்த நிலையை தூரிகை சிறுகதை வழியாக ஆசிரியர் காட்டுகிறார்.

இச்சிறுகதைத் தொகுப்பில் பதினான்கு சிறுகதைகளில் விடுதலை, உயிர்த்தெழுதல், நண்பர்கள் ஆகிய சிறுகதைகளைத் தவிர மீதமுள்ள பதினொரு சிறுகதைகள் இன்றறைய சமுதாய மற்றும் குடும்ப நடைமுறைச் சிக்கல்களைப் பேசும் எதார்த்த நிலை கதைமாந்தர்களைக் கொண்டு ஆசிரியர் இறையன்பு இக்கதைகளைப் படைத்துள்ளார். இக்கதைகளில் வரும் கதாப்பாத்திரங்கள் நேர்மறைக் கதாப்பாத்திரங்களாகவும் நேர்மையாக வாழும்பொழுது சமுதாயத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் அதனை எதிர்கொள்ளும் தன்மையையும் மிக அழகாக எடுத்தியம்குகின்றது. இச்சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதாப்பாதிரங்களின் நிலைகளை ஆராயும்பொழுது ஆசிரியரின் வாழ்க்கை அனுபவங்களின் தொகுப்பு என்பதை உணரமுடிகின்றது.

Scanned by TapScanner

**சான்றெண் விளக்கம்**

1. இராசம் கிருட்டிணன், தமிழ்ச் சிறுகதைகளின் தற்காலம். ப.74.
2. கோமகள், எழுதுவது எப்படி, ப.105.
3. அகிலன், கதை கலை, ப.21.
4. வெ.கனகசுந்தரம், ஜெகசிற்பியின் சமூகப் புதினங்கள், ப.200
5. சு.முருகேசன், சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினங்களில் சமுதாயப் பார்வை, ப.115
6. வெ.இறையன்பு, பூனாத்தி, ப.20
7. வெ.இறையன்பு, பூனாத்தி, ப.31
8. வெ.இறையன்பு, பூனாத்தி, ப.39
9. வெ.இறையன்பு, பூனாத்தி, ப.91

ஃ



Scanned by TapScanner